THE MADRAS LEGISLATIVE COUNCIL.

Monday, the 4th March 1968.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

Teaching Grant

***161 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon the Minister for Education and Industries be pleased to state :—**

(*a*) whether arrangements will be made for the payment of teaching grant every month to the Colleges, as many of the students of P.U.C. have been granted fee concession this year and as tuition fee is collected in Colleges having only P.U.C. course ; and

(*b*) whether any representation has been received in this regard from the Union of the private college managements ?

கற்பிக்கும் மானியம்

திரு, எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) இவ்வருடம் P.U.C. வகுப்பு மாணவர்களில் பெரும் பகுதி யினருக்கு கட்டணச் சலுகை அளிக்கப்பட்டிருப்பதாலும், புகுமுக (P.U.C.) வகுப்புகள் மாத்திரமிருக்கும் கல்லூரிகளில் கட்டண வசூல் இல்லாமலிருப்பதாலும், அக்கல்லூரிகளுக்கு கற்பிக்கும் மானியம் (Teaching grant) ஒவ்வொரு மாதமும் அளிக்க ஏற்பாடு செய்யப் படுமா ?

(இ) இதுபற்றி தனியார் கல்லூரி நிர்வாகிகள் சங்கத்திடமிருந்து முறையீடு ஏதேனும் வந்ததா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) மானியம் பெறும் கல்லூரிகளுக்கு ஒவ்வொரு திங்களும் "ஆசிரிய மானியம்" அளிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை. சில வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்காகப்புகுமுகக் கல்லூரி வகுப்பில் இலவசக் கல்வித் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டதனுல், தனியார் நிர்வாகத்தினருக்குக் கல் லூரிக் கட்டண வருவாயில் இழப்பு ஏற்பட்டது. கட்டண வருவாயில் ஏற்பட்ட அந்த இழப்பு அதே ஆண்டில், அவர்களுக்குக் கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாக, இழப்பீட்டுத் தொகை மானியமாக சமமாக மூன்று தவணைகளில் அளிக்கப்படும். 1967–68-ல் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒன்பது தனியார் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், இழப்பீட்டுத்தொகை மானியம் 1967–68லேயே அளிக்கப்படும்.

(இ) எழுத்து மூலமாக இல்லை. நேரடியாக வந்து சொல்லப்பட்டது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இழப்புத் தொகைக்கு விண்ணப்பம் செய்வதற்கு மாணவர்கள் முதல் அல்லது இரண்டாவது தடவை வாங்கிய கட்டணத்தை திருப்பிக் கொடுத்தவுடன் தான் விண்ணப்பம் செய்ய வேண்டுமென்று விதி வகுக்கப்பட்டிருக்கிறது. புதிய கல்லூரிகளில் பொருளாதார நெருக்கடி இருப்பதால், முதல் இழப்புத் தொகையை வாங்கி மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்ற உத்தரவின் பேரில் முதல் இழப்புக் கட்டணம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு ஆண்டு முடிந்ததற்குப் பிறகு ஒரு ஆண்டுக்குக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கடி இருப்பதால், மூன்று தவணையாகக் கொடுக்கலாம் என்ற முடிவு இருக்கிறது. அப்படிச் செய்தால் அதிகமான சிரமம் இருக்காது என்று கருதப்படுகிறது. அப்படி ஏதாவது சிரமம் இருந்தால், தக்கபடி ஆலோசித்து முடிவு எடுத்துக் கொள்ள முடியும்.

Production of bricks.

*162 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of brick kilns run for the manufacture of bricks through the co-operative sector and through the public sector in Madras State ;

(*b*) the monthly out-turn of these factories ;

(*c*) the value thereof ; and

(*d*) the amount of profit or loss according to the latest information available ?

செங்கல் உற்பத்தி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழகத்தில் செங்கல் உற்பத்திக்காக கூட்டுறவு மூலமும், சர்க்கார் மூலமும் இயங்கும் செங்கல் (brick kiln) தொழிற்சாலைகள் எத்தனை இருக்கின்றன ?

(இ) அவைகளின் மாத உற்பத்தி திறன் என்ன ?

(உ) அவற்றிற்கு உண்டான மதிப்பு எவ்வளவு ?

(எ) லாபம் அல்லது நஷ்டம் கடைசியாகக் கிடைத்த தகவல்படி எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) அரசு மூலம் இயங்குபவை—2.

கூட்டுறவு மூலம் இயங்குபவை—

தொழில் வணிகத்துறை மேற்பார்வையில்—8

சென்னை ராஜ்ய கதர் கிராமத் தொழில் போர்டு மேற்பார்வையில்—67.

(இ) மாதம் ஒரு லட்சம் முதல் 16½ லட்சம் செங்கற்கள்.

(உ) மாதம் ரூ. 3,500 முதல் ரூ. 32,390 வரை.